**மூன்றாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்**
**அசல் வழக்கு எண்.1268/2024**

| | | | |
|---|---|---|---|
| **சாட்சியின் பெயர்** | காளிதாஸ் | **மதம்** | இந்து |
| **த/பெ** | ஆதிமூலம் | **தொழில்** | ---- |
| **சாட்சி எண்.** | வா.சா.1 | **வயது** | 62 |
| **ஊர்** | அசோக் நகர், மேற்கு மாம்பலம் | **மாவட்டம்** | சென்னை |

11.09.2025 அன்று 1873ம் ஆண்டு சட்டம் 10ன்படி என்னால் உறுதி கொடுத்து சாட்சியமளிக்கப்பட்டது

**விசாரணை தொடங்கும் நேரம்** : பிற்பகல் 12.29 மணி
வாதிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். பிரதிவாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எனது மனைவி தேவி தாவா சொத்தை எந்த தேதியில் கிரையம் வாங்கினார் என்றால் 07.10.2020 அன்று கிரையம் வாங்கினார். அந்த 07.10.2020லிருந்து அவர் இறக்கும் வரை பட்டாவை எனது மனைவி பெயருக்கு மாற்றினோமா என்றால் இல்லை. 2021லிருந்து 2024ல் வழக்கு போடும் வரை எனது பெயரிலோ, எனது மகன்கள் பெயரிலோ பட்டாவை மாற்றம் செய்துவிட்டுமோ என்றால் 2024ம் வருடம் எனது மனைவி பெயருக்கு மாற்றினோம். அதை தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு இறந்தவர் பெயருக்கு பட்டா கொடுக்காமாட்டார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. நாங்கள் சென்னையில் வசிக்கிறோம். கிராமத்தில் நடைமுறை தெரியாது. வாரிசு சான்றிதழ், இறப்பு சான்றிதழுடன் விண்ணப்பித்தோம். நிலத்தை அளந்து பட்டா, சிட்டா கொடுத்தார்கள். நிலத்தை எந்த தேதியில் அளந்தார்கள் என்றால் வழக்கை எப்போது வழக்கறிஞர் தாக்கல் செய்தார் என்று எனக்கு தெரியாது. ஜூலை 19 2024ல் அளந்தார்கள். 1990லேயே தேவி வழக்கு போட்டு தீர்ப்பாகிவிட்டது. அதன்பிறகும் அவர்கள் நிலத்தை ஒப்படைக்கவில்லை. சாட்சி மீண்டும் தேவி வழக்கு போடவில்லை என்று கூறியது பதிவு செய்துக்கொள்ளப்பட்டது. தாவா சொத்தை பற்றி தெரியாமல் நான் முரண்பாடாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது மனைவி பெயரில் ஏற்பட்ட கிரையப்பத்திரத்திலாவது சொத்தின் அனுபவத்தில் உள்ள பிரதிவாதி அதை காலி செய்து வசம் கொடுக்க வேண்டும் என்ற வாசகம் எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை. காவல் நிலையத்தில் பிரதிவாதி எழுதிக்கொடுத்தார். அவ்வாறு பிரதிவாதி எந்த காலத்திலும் காவல் நிலையத்தில் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் என்னிடம் உள்ளது. 12.02. வருடம் எனக்கு ஞாபகம் இல்லை. நான் கொடுத்த புகாரிலும் உரிமையியல் வழக்கு என்பதால் நீதிமன்றத்தில் சென்று பரிகாரம் தேடிக்கொள்ளும்படி இருவரிடமும் எழுதி வாங்கிக்கொண்டார்கள் என்றால் சரிதான். உண்மையிலேயே கிரைய கொடுத்த நீலாவதி என்கிற பஞ்சாட்சரத்திற்கு தாவா சொத்தில் உரிமை இருந்தால் பாகப்பிரிவினைக்கு பிறகு சொத்தை பிரதிவாதியிடமிருந்து மீட்க நடவடிக்கை எடுத்திருப்பார் என்று சொன்னால் எடுத்து இருக்கிறார். பலமுறை நேரில் பார்த்தும், ஆள் மூலமாகவும் கேட்டு இருக்கிறார். நான் சொல்வது தவறு என்றாலும், நான் தாக்கல் செய்த வழக்குரையிலேயே குறிப்பிடப்படவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. இந்த சொத்துக்களை பொறுத்து வரை பிரதிவாதிக்கு உரிமை இருக்கிறது என்பது

தெரிந்திருந்தும் ஈன விலைக்கு வழக்கு சொத்தை வாங்கி பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் எனக்கு சாகதமாக இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சென்னையை சேர்ந்தவர் என்றால் எனக்கு சொந்த ஊர் வளவனூர், சாலையாம்பாளையம் கிராமம். நான் 5 வயதிலிருந்து சென்னையில் வசித்து வருகிறேன். 1990ல் பாகப்பிரிவினை ஏற்பட்டதும், கிரையம் கொடுத்தவர் தாவா சொத்தில் அனுபவத்தில் இருந்ததும் எனக்கு நேரடையாக தெரியாது என்றால் தெரியும். நானும், என்னுடைய அப்பாவும் தான் பாகப்பிரிவினை செய்தோம். என்னுடைய கையொப்பமும், என்னுடைய அப்பாவின் கையொப்பமும் பாகப்பிரிவினை பத்திரத்தில் உள்ளது. சாட்சி மேலும் அசல் பாகப்பிரிவினை பத்திரம் என்னிடம் இருப்பதாக கூறியது பதிவு செய்துக்கொள்ளப்பட்டது. எனது அப்பா பாகப்பிரிவினை பத்திரத்தில் எத்தனாவதாக சாட்சி கையொப்பம் செய்தார் என்றால் எனது அப்பா சாட்சியாக கையொப்பமிடவில்லை எல்லாருக்கும் பாகம் பிரித்துக்கொடுத்தார். உரிமை கையொப்பம் போட்டார். உரிமை கையொப்பம் என்பது எந்த பக்கத்தில் உள்ளது என்றால் அனைத்து பக்கத்திலும் உள்ளது. சாட்சியிடம் வழக்கறிஞர் வா.சா.ஆ.1 ஆவணத்தை காட்டிக்கேட்டபோது அது இணைய நகல் என்று கூறியது பதிவு செய்துக்கொள்ளப்பட்டது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் இறுதி பக்கத்திலாவது உரிமை கையொப்பம் என்ற பெயரில் என்னுடைய தகப்பனார் கையெழுத்து உள்ளதா என்றால் இல்லை. அசலில் உள்ளது. அதனால் 1990ல் நடந்த பாகப்பிரிவினையை பற்றியோ, விற்பனைதாரர் தாவா சொத்தில் உடமையில் இருந்தது பற்றியோ எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. நான் 5 வயதிலிருந்து சென்னையில் இருந்து வருவதாக ஒப்புக்கொண்டதால் எனக்கு தாவா சொத்து பற்றி எந்த விவரமும் தெரியாது என்று சொன்னால் சரியல்ல. நான் மாதம், மாதம் வந்து செல்வேன். என்னுடைய அப்பாவின் நிலத்தையும், பஞ்சாட்சரத்தின் நிலத்தையும் நான் கிரையம் செய்து அதையும் நான் தான் எஸ்.நடராஜன் என்பவருக்கு குத்தகைக்கு விட்டுள்ளேன். அந்த விவரத்தை நான் வழக்குரையில் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். வழக்கை நான் 44 செண்டுக்கு மட்டும் தான் போட்டுள்ளேன். நான் தான் நடராஜனுக்கு குத்தகைக்கு விட்டுள்ளேன் என்று கூறுவது நான் தாக்கல் செய்த வழக்குரைக்கே முரண்பாடானது என்று சொன்னால் சரியல்ல. அதனால் இவ்வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டியது என்று சொன்னாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்த வழக்குரைக்கும் சாட்சியத்திற்கும் முரண்பாடு உள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் வழக்குரையை படித்து பார்க்கவில்லை. அதனால் உரிமையில்லாத எனக்கு வழக்கை தாக்கல் செய்ய எந்த உரிமையும் கிடையாது என்று சொன்னாலும், வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டியது என்று சொன்னாலும் சரியல்ல.

**விசாரணை முடிவுற்ற நேரம்** : பிற்பகல் 12.58 மணி

அவையறிய இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, பின்னர் சாட்சி சொன்ன பதில் சரியென சாட்சியால் ஒப்புகொள்ளப்பட்டு, என் முன்பாக கையொப்பம் இடப்பட்டது.

(ஒம்).S.ஜீவநந்தினி,
மூன்றாவது கூடுதல் சார்பு நீதிபதி,
விழுப்புரம்.